417

உ

செல்வக் கணபதி துணை.

திருஉலைவாய் மலைமீது எழுந்தருளிய

# ஸ்ரீ சித்தானந்தன்மீது

# நித்தியானந்த கிர்த்தனை.

அருள் நித்ய ஆனந்தம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1928
MADRAS

இஃது

ராசீபுரம் பெருமாள் செட்டியார், வையாபுரியா பிள்ளை

அண்ணாமலை செட்டியார்

இம்மூன்று செல்வர்கள் கேட்டுக்கொண்டபடி ஷையூர்

செண்ட்ராய கவுண்டர் பொருளுதவியால்

அருணாஜல சுவாமிகளால் இயற்றப்பட்டு

திருக்கையூர்

...பரானந்த சுவாமியவர்களால்

பார்வையிடப்பட்டு

...ச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1928. [அணா 4.

ஓ26'.417
N28
147434



உ

ஸ்ரீதண்டபாணி துணை.

அரிவா ரரிவா ரரிவுமதி விள்பவ ரேகி
தெரிவா ருளைவந் தெரி.

## கலி விருத்தம்.

---

தவமெலாந் துளிர்பூ உலைவாய் மலை
ஜெபர சங்கிருபா கரிதற் கலை
சிவ குலாமறை சித்தர் வளர்தில்லை
நவகரி முகனடியிணை பணிகுவாம்.

---

## நேரிசை வெண்பா.

---

அம்மை யுமையவள் ஆதிபதி யளகி
உண்மைக்கு விபப்பு உருவளகி - இம்மையில்
செம்மை உலைவாய் மலைமீது புகருநரைக்க
நன்மை திருவருளீ ந்தா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1928
MADRAS

## கலி விருத்தம்.

சித்தாதி சித்தேசன் றிருவருளை
பெற்றோர்க்குப் பிரபஞ்சப் பிறவி யில்லை
வித்தாகி நின்ற வேலனுக் கதிபதியின்
நித்யா னந்தக் கீர்த்தனையைப் படி.

சற்றே விலகி யிரும்பிள்ளாய் — என்ற மெட்டு.

### பல்லவி.

சித்தர்மலைச் சிங்காரமே செப்புதல் நமஸ்காரமே (சி)
உத்தம புருஷர் உண்மையில் வரும்நாளில்
உலைவாய் மலையிலமர்ந்த (சி)
சிவ கணங்களும் பதிபசுமலை தவமுனிவர்க
ளெழுந்தருளிய (சி)
ஜெகத்தில் வருத்த சுகத்தில் மருத்வ (சி)

### அநுபல்லவி.

சிலர் கோலிபாடுவார் சிரித்து வேலிமேபாடுவார்
பாலர்கோலி பரிக்கஅடியை மார்பில்தாங்கி பேர்விளங்கிப (சி)
முல்லைமல்லிகை வாசமே முலிநகவெகு நேசமே
முழுதும்ரோஜா பழுதில்லாமல் எழுதும்பதியில்
எழுந்தருளிய (சி)
அளகுமாதுளை செண்பகம் ஆரிய கொய்பாரகம்
பளகப்பளகத் தெரியும் நதிகள் புளகத்தள
குகானந்தன் வளர் (சி)

புலவர்கள் புகழ்பாடுவார் பொதுவில் நடனமாடுவார்
கலைவர்கதைகள் வாசித்திரமை உலகவளமை போகப்பருவ
சிதம்பரந்தமிழ் பாக்யமே ஜெகமதில் அருள் வாக்யமே
விளம்பரம் அருணாசலப்பணி துலங்கிடத்
திருப்புகழ் முழங்கிப

---

கலையேடாமல் ஜலம்விடாமல் — என்ற மெட்டு.

மதிவிடாமல் பிதளிமேலதும் மணிதிருச்சடைநதி
மணக்குதுபிச்சி செண்பகம் முல்லை மரிக்கொழுந்துசித்தன்பதி
விடைகள்பாக சடைமுடிநடை வேலுக்கதிபதி பிதா
வேதங்கைபிடி நாதகங்கணன் பாதமேமகமஸ்திங்கனம்
வேடரூபகடாக்ஷனே அருள் கூடகந்தவேள் மோக்ஷனே
விரும்பியனைக்க கரும்பின்ருசிபோல் சித்தகந்தரும் ஈசனே
அன்பு கூட்டி உன்பு நாட்டி
என்பு பூட்டி மாட்டினேன்
தன்பு காட்டி மூன்பு சூட்டி
வன்பு ஓட்டி வெட்டுவாய்
ஜெயசிதம்பரம் புயபராக்கிரம சிவபணி யருணாசலம்
பயம் அணுகிடா ஜயம் பெருகிட
பார்வதி கருணாகர திருவருள் (ம)

---

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது — என்ற மெட்டு.

பல்லவி.

சித்தர்மலையில் அமர் அருளானந்தா சேதிமுறை கேளும்

அநுபல்லவி.

உற்ற பருந்தளித்தால் கடைத் தேரலாம்
உண்மை - உண்மை - உண்மை - நன்மை (சி)

சரணம்.

பக்தர் ஒருகோடி கற்றிக்கண் பார்வையில
பக்கத் தோழுதேனோ இன்று
பாதக மொழிந்து சாதனையா லுன்னை
பார்த்துத் தெளிவேனோ
இத்தருணங் கிடைப்பை கூர்ந்ததுபோல் இனி
எத்தினமுங்கிடைப்பை தா நல்ல
சக்திதனை யறிதல் கதியுன்னருள்
சதா கண்பார் இதோ உன்பேர் (சி)

உடலெனபந்தரங் கூலக்கற்பித்து நீ
ஓடி ஒலியலாமோ பெரும்
பாவத்தைக் கட்டியே லோபித்தனமாக
பார்த்துத் தெளியலாமோ
ஏவல் பிணிகள் அணுகா வண்ணம் எனை
காவல் புரிவாயோ உந்தன்
காலில் விழுந்து பணியக் கருணைக்கண்
பார்த்துக் குரியாயோ
பூவினி லம்பணம் பொருந்துஞ் சிதம்பரம்
போற்றக் களிப்படைந்தாய் கவி
பூட்டிய அருணாசலமுனது தொண்டன்
பூரணமாய் காரணமாய் இனி
பிடிசாம்பலுக் கிரையாகுமுன படிமேல்
மதுரம் குணக்குடி (சி)

ஈசனை நினைமனதே — என்கிற மெட்டு.

பல்லவி.

சித்தேசனை நினைமனதே — உன்னையாண்டவனை (சி)
தீபவொளி ஸ்வப்ரகாசப் — பூபதியமர்ந்தோர் (சி)

அநுபல்லவி

முத்தின மார்க்கத்தில் — மோடிசெய்யாதே மனதே
முன்னருளிய சித்து — இன்னதெனத் தெரிந்து
சத்திய மார்க்கத்தை — தவறிவிடாதே மனதே
சகல பசுவுமுனக்கே — கிடைக்கும்படி (சி)

அல்லும் பகலும் சித்தன் — அருளினைப் பாடுமனதே
அகத்தை யொடுக்கி — ஆசாள்வாயே பதில்
சொல்லும் தமிழில்சுவை — சுகப்பிரம்மமே மனதே
சோதிப்பிரகாச வஸ்து — நீதிமகாராஜனென (சி)

பெட்டிபண மிருந்தால் — பின்வருமோ மனதே
பேதைக் கெடுத்துரைக்கத் — தான்தகுமோ மதி
மட்டி மடையனென — மாறிவிடாதே மனதே
மங்களஞ் சிதம்பரஞ்சொல் — தங்கும் அருணை என்பு (சி)

---

பாதமே கேதியேன — என்ற மெட்டு.

பல்லவி,

மா மதுரகுருவே — பொருளுருகவு பா நீ சொல் (மா)
மாயா திருமணத்தில் — ஓயா திருக்கத்தகு (மா)

அநுபல்லவி.

தாமத மரியேனே    தனையரிய
தாதா சித்தானந்தனே    வாதா யிருக்கத்தகு    (மா)

சரணம்.

வா தனைபுரிய    எனி தவரையில்
சா தனைபுரிய    நீ தமிழுரையில்
வே தனைக்குரிய    காரணக் கரையில்
நா தனைத்தெரிய    வே கருத்துரையில்
நாவா லெடுத்த மந்ரம்    உறு கொடுத்த தந்ரம்    (மா)
கார் கருணைக் கண்ணால்    பார் தருணங்கூவ
சீர் பெருகத்தமிழ்    யார் அருளிய சொல்
நேர் மறுமொழிக்கு    வேர் திருவுளத்தில்
காப்பூ சிதம்பரஞ்சொல்    வர்மு அருணாசல    (மா)

---

சரி சரி — என்ற மெட்டு.

பல்லவி.

அது சரி    ஆத்மா விஜாரணைக்கதை    (அ)
அத்திமுகடன்    சித்தன் மகிழ்வதும்    (அ)
அம்பிகையின் மனம்    நம்பிக்கொள்ள நட    (அ)
ஆறுமுகவன்மேல்    ஆனந்தம் பாடடா    (அ)
அகம்பேசியே சுகந்தேடாமல் விபசாரங்கள் வினைதேடுது    (அ)
ஆணவமாய் வகையில்    வீணுக்குழைக்குது    (அ)
அகங்காரம் பேசியே    மதிகெட்டுப் போச்சுது    (அ)
மாதர்களை நம்பி    மசண்டு மடியுது    (அ)
மாந்தர்க்கள் செய்கின்ற    கூத்தான காரியம்    (அ)

சரணம்.

பொதுவில் இந்த பூதங்களெனை பூசைநேசந் தேடுதே
பொழுதுவிடியு முன்னதாக போஜனத்தை நாடுதே
மதுவையுண்டு ரசமிதென மகிழ சங்கம் பாடுதே
மதமோ நல்ல விதமோ விள்ள இதமோ கதை சுதிபொடு படி (அ)
மாமிசங்கள் கஞ்சா உண்டு மதியாம லுரைப்பதும்
மாத்திரைப் பெண்களைக்கண்டு க்ஷேத்திர மிளப்பதும்
மடிவார்களோ குடிகாரர்கள் முடிவார்களோ படிநாதர்கள் (அ)
இருதயக் கண்ணாடி விளக்க வருதிவாகைத் தேடடா
சிறிதுநேரங் கருதாவிடல் உறுதிஎமன் வருகுவான்
எதமாயிரு சதமோஉயிர் அருணாசலக் கவிசொல்வதும் (அ)

## நொண்டிச் சிந்து.

அநுசரிக் கென்ன சொல்லடி — அனுசரித்து
சரி சரி யென்னபதில் சாற்றுவாயடி
இருஒரு பக்க மேளமா — இசைந்தபடி
வரிமலை போகலாமென் றெண்ணி விடுக்க
சோமசுக்ர வார முதலாய் — நல்லோர்கள்
நாமமதையே தொழுது க்ஷேமமடைந்தார்
பாலகனில்லாத வருமை — பதிகடக்க
வேலவனருளில் ஒரு மாலை பெறலாம்
காலையி லெழுந்து வருவீர் — சடன்முடித்து
மாலைமணி காலரைக் கிணங்கி நடப்பீர்
சங்கம்விடை பெற்று மகிழ்வீர் — பதிலுரைத்து
மங்கள முண்டாகவென கெங்கை யெடுத்து
வாரும் வழிகூடி நடக்க — வடமுகத்தில்
யாரும்பள்ளிக் கூடமொன்று பந்தடி தடம்

கோவிலிது காவல் பெருமாள் — குடிகள்மிக
தாவிவிளை யாடுவது சொல்லத்தகுமா
முத்துக்காளிப் பட்டி கடந்தோம — முகமலர்ந்து
சித்துவிளை யாடும்மலை கிட்டி கடந்தோம்
ஆனைமுகம் பானை வயிறும் — அச்சோலையில்
தேனையுந் தினையும் அள்ளிப்பானம் பண்ணுவாள்
எரிமலை கூறுவதைக் கேள் — இதுவும்பதி
பேரு இடும்பன் கடம்பன் சிறுபெருக
முத்துநவ ரத்தினப்படி — முடக்குக்கொரு
வித்தொடு விருக்ஷநிழல் பக்திபவுசு
ஆறுபடை வீடு துலங்கி — அம்பாள்யிருவர்
ஏறிமயி லேறிவிளை யாட வணங்கு
மூழ்கதிருச் சடை நதியே — மும்மூர்த்திகள்
வாழ்கசிறு பாலகநி ராசையும் பெற்றோம்
நந்தவனம் பாரிஜாதமே — கடினமுல்லை
செண்பகம் மருக்கொழுந்து மாதுளை பிச்சியிரு
வாச்சிரோஜா மாக்ஷமை புன்னை — தென்னைகொய்பா
குக்ஷமக் கமுகு வில்வந் தேர்ச்சிஅரளி
தீபவொளி யாகுது சித்தன் — அருகில்சிவ
லாபகையில.ச நாதன் பாவ நிவர்த்தி
சித்தனிடம் பெற்ற குழந்தை — வளர்ந்து இங்கு
நித்யானந்தக் கீர்த்தனை எடுந்து முடிக்க
நற்றமி ழுறைக்கக் கேளடி — நல்லார்களிங்கு
கற்றதமி ழுற்றபடி முற்றும் மகிழ்வார்
உற்றபேர் சித்மபரம் மொழி — உகந்தபடி
பற்றுதல மிகுந்த அரு ணாசலமடி.

---

கண்டால் ஆனந்தமே — என்ற மெட்டு.

பல்லவி.

சித்தா னந்தனமே பக்திக் குகந்த தெய்வ (சி)

அனுபல்லவி.

சிந்தைநலிவாலே நொந்து தந்தையென வந்துகந்தேன் (சி)
சிரத்துக் குறத்தி யிடத்தில் விடுத்த (சி)
செண்டு மலரிதழ் சூண்டுபணி பதி (சி)
கண்டு களிப்புற மண்டு விளங்கிய (சி)

சரணம்.

வித்தை விளையாடும்மன்றுள் வேதப் ஓதுங்கிபாதியே
வேண்டுகோள் கிரங்கிபெருள் தந்தால்வி சோதியே
முத்தைத்தரு பக்திக்கிணை மோக்ஷசங்க கீதியே
மூலமந்ர காலமரிந்தோது இனி
நாளைவீண் போக்குவதே தகாது நல்ல
வேளைபானவைக்க என்ன வாது ஆனால்
பாலசுப்ர மண்டன் பெய ரேது

பதாம்புய தோளா பஜனை நிரு நாளா
சதாபுகழ் பாட இதோமுடி சூட
பண்டோர் துதிபுரி கொண்டாய் தநிகுரி
தண்டாயுதவரி கண்டானந்தஞ்சரி (சி)

அருணகிரிக்கு கருணைபதுவே ஆமோதரிசித்தேசனை
தருணகிருபை பெருக சபயம் தாரகதவை வாசனை
ஆசை சிதம்பரம் மொழிக்கிணங்க பணி

ஓசை அருணாசலமுன் வணங்க — பரி
பாசைபடிபேரிய கங்கணங்கள் — சித்தன்
பூசைமுடி கொண்டதே மங்களங்கள்
பத்மாசனப் பாத்திரம் — நித்யானந்தக் கீர்த்தனை
பாடுமடி யாருடனே — கூடிவிளையாடு முத்து (சி)

---

காசினியோர் புகழ் பேசிடும் நாகூர் — என்ற மெட்டு.

பல்லவி.

தேச சிலங்கிடும் பூசை நெய்வேத்ப புள்ளிமேலே
திங்களிலங்கிடும் மங்கள சித்தின் நல்லுட்ப்ரீதியிலே ()

நேசமிகுந் தாசாளத்தருந்திடுஞ் சத்திவேலே
நீகரொளி பதிபசு திருச்சடைநதிவளர் கந்தவேலே (தி)

அநுபல்லவி.

கண்ணால் கஞ்சன் — கனதிருமருகன்
காவடியே விளையாட்டு — அருள்
கண்டிடுங் தொண்டர்கள் — நின்று பணிந்திட
பெண்டுகளின் முறைகேட்டு — தமிழ்
சொன்னவனும் மதி — யென்னவனும் தவம்
பொன்னுலகம் பெரும் — ரோட்டு
கருவுநசமாச வருகுருமாகதி — திருவிளையாடல் பாட்டு
கார்க்குங்கான் — மார்க்கந்தான்
கண்டக மண்டல முண்டுதிரண்டன ததிங்கிணதோம் காதா (தே)

மன்னன் சித்தேசன் மனமகிழ மண்டலமெங்கும் பெயராம் வனம்
தென்னை கமுகு புன்னை வில்வம் செண்பகம் ரோஜா பயிராம் மணி
தன்னாசை மண்ணாசை தருமோர்ப்பகதி வரும்பார் குருமதி
தா தா ததிங்கணததோம் தத (தே)

வீதியுலாவிய ராஜதிருவடி ஜோதியமைந்திடுஞ் சோலை நல்ல
போதிவிளம்பர ப்ரீதிவனக்கிளி நீதிபுனைந்திடுங் காலை மணம்
மீதிலுலாவிய சிதம்பரஞ் சொந்தன் மாமகள் தங்கிய வேலை
மாநாசீர் நாதாபார்
வாதோகூர் பாதம்சேர்
மதுரசம் அருணசல மொழிகருணை
காவடி வேலுக்கதிபதி தகதோகுகிதிகதகிணத்தோம் (தே)

---

முருகன் திருமால் மருகன் பெருமை — என்ற மெட்டு.

பல்லவி.

தேனே அக்குபோன வகையென்னடி தெய்வ
சித்தேசன் வாழ்கின்ற உத்தம குகைக்குள் (தே)
சிவகுருபரனவ ரடியினை தவமுனிவர்க ளநுலவாய் மலே (தே)

அநுபல்லவி.

கானமயில் வேழி கந்த னிருப்பதை
கண்டதுண்டோ சொல்லடி அந்த
கானுங் குறவள்ளி தெய்வானையை மணந்த
கர்த்தன் சொன்னதென்னடி
வானு உறக்கமற் றேகிகடந்நதில தேனுந்தினைமாவாவது
தேடும் அருள்கனியாவது

திகட்டுஞ் சிதம்பரஞ்செவி    புகட்டும் அருணாசலக்கவி
செப்பியவரம் ஒப்பிபபடி    தப்பி தமிலாதுரையடி (தே)

---

அழகிய வேலுக் கெதிர்வேலுண்டோ — என்ற மெட்டு.

பல்லவி.

ஜெயசுப தேசோமயானந்தமே
சித்தர்தேடும் பண்பாடும் கொண்டாடுந் திருச்சடைநதி    (ஜெ)

அநுபல்லவி.

தபத்திற் கதிகாரன்    தாரச் சிங்காரன்
தண்டாயுதன் தான்கனிந்தான்    விக சிதபலை (ஜெ)
அகத்தில் கனிந்தோங்கும்    அடிமை யிடந்தங்கும்
அன்பே பேரின்ப தருப்பார்    உலைவாய்பலை (ஜெ)
அருணகிரிக்கீதா    அருளுங் குருநாதா
கருணை செய்யத்தோதே    கடவுளான தாதா
காசி ராமேஸ்வரம்    பூசிக்கும் பிரகாசபூ    ()
சித்தம்பரம் போற்ற    செல்வர் புகழேற்ற
பக்தர்க் கருள்ச ற்ற    பார்க்க வெகுகூட்டம்
பக்ஷத் அருணாசலப் லெக்ஷர்    வருணாஸ்திரம்    ()

---

தண்டாயுதா உன் தஞ்சமே — என்ற மெட்டு.

சரணம்.

கண்டேன்கண் ஆனந்தங்    கொண்டேன் (க)
கலிதீக்குஞ் சித்தர்மலையின்    காக்ஷியகிலையின்று (க)
கங்கை திருச்சடைநதி    மங்கை பருவங்கொள்பதி (க)

பண்டோர் துதிபுரி பாவவினாசன்
பலகலை யுணர்ந்தரி நேமக பூசன்
தண்டார் மல்லிகை பலரணி வாசன்
தவத்தினுயர்ந்த சித்தன் மருத்துவ நேசமதை (க)

கலியுக மதிலொரு கனக மகாபதி
காணக் கிடைத்திடாத ஞானப்போதித
புலிகாடி சர்ப்பங்கள் வணங்கிடும் ஆதிபதி
போற்றிடக் கருணைக்கண் பார்த்திடும் நேர்த்திலைய (க)

தொண்டர்கள் மனதினில் துலங்கிய ஈசன்
தொல்லை வினையற்றும் அருள்சுவை நேசன்
செண்டார் குளல்பால் அகமகிழ் சபேசன்
சித்திரப் பதிதுலங்க முத்திலா தமிழ்வணங்க (க)

முருகவித்வ புகழ் முழங்கிடக் கிபாதி
முபத்ஸிபதனால் சிதம்பர மொழிநீதி
பெருகவே பக்தி அருணாசலஞ் சோதி
முன்புமூன்று வில்வமரம் அன்புகொண் டளிக்கத்திரம். (க)

---

நித்யானந்தத்தை நாடு — என்ற மெட்டு.

பல்லவி.

அத்விதப் புகனைப்பாடு சித்தன்
அருள்கனி முடிசூடு ஓயணமே (அ)

அநுபல்லவி.

பக்தியின் மார்க்கம் பஜனை கொண்டாடு
பலிதமெய் நாயகன் பண்ணிய வீடு (அ)

சந்திர காந்தி　　துலங்கும் பந்தானம்
சற்சனர் சங்கங்கொள்　　தரும நிதானம்
சுந்தர அண்ணல்பால்　　சுகித்த சந்தானம்
ரு ரு விபரீதக்　　கடலுடன் ஈனம் (அ)

ஆத்ம விஜாரணை கண்　　டானந்தங்கூடு
அன்பில் குளிகையுண்டு　　புல்ராகம் பாடு
சோத்துத் துருத்திக்கொரு　　சுருதியை நாடு
சோதியமைந்த வாசி　　யோகங் கொண்டாடி (அ)

பந்த மயூரா　　மதனபூ பாகம்
பம்பரம்போல் விளை　　யாடும்மெய் யோகம்
சந்ததஞ் சிதப்பாம்　　மொழியே விவாகம்
சர்வ விக்ஷேப　　சாந்தே ஹேற (அ)

தொண்டர்கட் கருளிய　　சுகப்பிர்ம ஞானி
சூக்ஷ்மத் யானத்தின்　　னடிமுடி பேணி
அண்டபுவனங்களில்　　நிறைந்ததே காணி
ஆமோதரிக்கும் அரு　　ணாசலம் வணி. (அ)

---

திருப்பரங்கிரிவாசா — என்ற மெட்டு.

பல்லவி.

திருச்சடை நதிவாழ　　சித்தன்
சவமதி யருள்வாழ　　தகததிங்கிணதோமென (தி)

அநுபல்லவி.

விரிசடை புலியுடை　　விஞ்சைவேல் பிடிக்க
சரிவிடை மலைக்குவை　　சாதனை தொடுக்க
இரவும் பகலுங்கவி　　ஈசன்மேல் விடுக்க
இகபரசுகபதி பசுநிலே　　மகாகெங்கை (தி)

அங்கங் குளிர்ந்த சிவ சங்கரன் முடியில்
ஆழ்ந்து புகுந்தாதி மங்கள சுதியில்
சங்கம் மகிழ்ந்தகுல கங்கண படியில்
சப்தரிஷி தபசுமெச்சிப் புகழ் கொடுத்த (தி)

அல்லும்பகலும் பக்தி அருள்மதி வாழ
ஆசான் சிதப்பா மொழிதமிழ் வாழ
சொல்லும் நித்யானந்த கீர்த்தனை வாழ
தொண்டன் அருணாசலம் விண்டுகண் டானந்திக்கும் (தி)

---

புள்ளிக் கலபமயில் வாகன் — என்ற மெட்டு.

சரணம்.

பத்தினியே சொல்வதை நீகேளு பசு
பதிசனை மூழ்கநல்ல நாளு பெரும்
பக்தர்கள் பணியுஞ் சித்தர்வேலு அடி
பாலரோடு கோலியாடும் கேலிம்பதங் பாயிடிங்கு
வருவாய் அருள்பெறுவாய் (ப)

உத்தமியே நந்தவனம் பாரு இதில்
ஓங்கி வளர்ந்தபதி யாரு வேல்
ஏந்தி நடந்தபடி சீரு இன்னும்
ஓடிநதி கூடிவளம் பாடிவரத் தேடிவாடி
மயிலே வர்ண குயிலே (ப)

வண்டுகள் ரீங்காரங்கொண்டு பாடும் பணி
பெண்டுகள்நீ ராடவருங் கூடும் மணி

142434

ருண்டிகள் பருவதம்போல்சூடும் யிரு
வாச்சிமுல்லை செண்பகப்பூ மாக்ஷிமை யரளிவட்டம்
பேசும் கமழ் வீசும் (ப)

மங்கள சிதம்பரஞ்சொல் மருவும் மதி
கங்கணன் அருணாலம் உருவும் பதியில்
சங்கங்கள் நிறைபசித்தன் குருவும் மாதம்
மாசி ஆறு தேதிசனி வாரமதில் சண்டாகதி
காக்ஷி சித்தன் சாக்ஷி (ப)

---

ஓ திருநல்லூர் வளர் ஒய்யாரா — என்ற மெட்டு.

சரணம்.

பக்திதமி ளொத்தமகா விடு இதை
பார்த்துப் பணந்தேடிசுடு காடு அருள்
சேர்த்துகவி பாடிவிளையாடு மிக
பருகிபதனம் உருகியகுணம் பெருகியமணம் அருகினிலொரு (ப)

சித்தர்மலை மேவிய சிங்காரன் தெய்வ
வித்தில்லா விருக்ஷவில்வ பாரன் நலம்
பித்தமே தெளிவதில் எய்பாரன் என்றும்
அகரவென உலைவாய்மலை சாசரவென பலகலைபுகழ் (ப)

அஞ்சுவய தானசிறு பாலன் கோவி
கெஞ்சிவிளை யாடும்வடி வேலன் கிளி
கொஞ்சிமா மயிலின் கந்த கோலன் நல்ல
அளவிய குருபர நடையுடை புளகிதனருள் விடைபடகுடை (ப)

கண்டவர்கள் விண்டதில்லை வாக்யம் இந்த
தொண்டர்கட் கருள்கொடுத்த பாக்யம் இதை
உண்டவர்க் குசுகந்தே சிலாக்யம் ஆஹா
உடையவரென சடைமுடியுடன் (ப)

மிடையணி திருச் சடைநதியுடன்
தூங்கிவளர் கோங்குபுன்னை ரோஜா தென்னை
காந்திமதி புல்லைபதி ராஜா (ப)

தன்னைடரிந்தோர்க்குதமை நாடு இனி
தனைபரியா தாரிருநால் மாடு உற்ற
அன்னையர்ந்தாலதுவுள் வீடு உண்மை
தவசிதப்பாங் கவியுணர்மறை சிவசுவை அருணா சலங்கரை (ப)

---

கருணாகர சீமான் — என்ற மெட்டு.

பல்லவி.

பஜணாமிர்த மோக்ஷம் பண்டாரவேல் கடாக்ஷம் பதிசித்து (ப)

அநுபல்லவி.

ரசமே சிவநாம சங்கீர்த்தனம்
ராகக்கலை யொடுபாடிடும் நிர்த்தனம்
நிசமேதவ யோகிகளால்கனம்
நிகரெதிரென குரு அகயகிலொடு திரு (ப)

வீணைதாப்பூர் பலதாளம்
வேதச் சுபஞயன மேளம்
ஆனைமுகன் அருள் ஏராளம்
அந்தரங்க சித்துமலை சுந்தரன் மகிழ்ந்த நிலை (ப)

வேதசித் தாந்தியைத் — தேடி
விளம்பா முருகானந்தப் பாடி — நாதகுரு சிதம்பரங்கூடி
நாட்டும் அருணாசலம் — ஊட்டும் சருணைக்கனி
காட்டுஞ் சித்தரின்பமே — கூட்டும் முத்திக்குவழி (ப)

---

முத்திநெறி அரியாத — என்ற மெட்டு:

சரணம்.

வேலனுக்கு அதிபதியே இவ் — வேளையென்னை யாள்மதியே
பாலுக்குட் பாகிதியே — பழமையருள் புரிகதியே
நாளுக்கோர் படிமிசையில் — நாயகனே குடிபுகுக
கேளிக்கை பருவதஞ்சூழ் — கிளிமொழியே தமிழளியே(வே)

மாதவனே சேதிமுறை — மனத்திறமை கூடியுற
சாதகனே தமிழ்பறையில் — சாற்றுகவி பூரணமே
ஆசைக்குத் திருவுருவே — அருணகிரி திருப்புகழில்
ஓசைக்குத் தருகுருவே — உலைமலைவாழ் சித்தருவே(வே)

தங்கமயக் குண்டுமணி — தாரகசந் தானபதி
சங்கமய கற்கண்டுகனி — சமயகுரு பாகானே
தோணிக்கோர் கயிற்மிகுதி — சுரிதிமொழி பேரின்பம்
ஏணிக்கோர் சுவைமிகுதி — இகபரமே சுகமருள்வாய்(வே)

மாணிக்கக் கல்தகுதி — மறகத மாமயிலோ
காணிக்கை தமிழுருதி — கருணைமகா பெருங்கடலே
மாதுக்கோர் மயமபெரிது — மதனமகா முடிராஜன்
சாதுக்கோர் சுயம்இனிது — சரசமுகா குடிவாசம்(வே)

| | |
|---|---|
| வித்தக்கோர் விருக்ஷமென | விரதசதா தளகிருபை |
| சித்தக்கோர் பக்ஷமென | திரம் பூத்த குருமணியே |
| ஆசான்யார் சிவபரமே | அருள்கவிகளை இணங்க |
| தேசோமயபவமே | திருஅருணை சலம்வணங்க(வே) |

---

கிளியோ சுரைக்யான ரஞ்சித மொழியோ — என்ற மெட்டு.

### பல்லவி.

மந்த்ரோ பசுபவடிமயில் நடமிடு லோலா மகிழ் (மீ)

### அநுபல்லவி,

வாகு முருகசடை வணங்குஞ் சோதி தவ மகிழ் (ம)
வானுலாவு கிபாதிமுகம் தானுலாவிடச் சிங்கார மகிழ் (ம)
மங்காத இங்கித சங்கீத சந்தோஷ மகிழ் (ம)
வாசவன் முதலினோர் ஈசனும் மேலாந்துதிசெய் மகிழ் (ம)
வாழைபடி வாழையாக வாழவைக்கும் தெய்வசித்து மகிழ் (ம)
பணந்தங்கும் நினைந்தெங்கும (ம)
தினம்பொங்கும் சிவகுக மய மகிழ் (ப)
வாரமாதி காளிலுறை சாரப்பதி ஞாலுதெய்தி (ம)

### சரணம்.

| | |
|---|---|
| சந்திர னொளிக்கிணை | தங்கிடுஞ் சித்தன் |
| சார்ந்த தேசினால் | மகிழ்ந்திடும் பித்தன |
| பந்துரை மடந்தையர் | பணிந்திடும கர்த்தன் |
| பதி கொண்டாட்டம் | பழகுநாட்டம |
| அழகிய கூட்டம் | அற்புத தேட்டம் (ம) |

சுந்தரகாந்தி சிதம்பரம் பொழி நேமி
சூக்ஷ்மத் தமிழ்ப்பிரந்த யாழ்ப்பாண பூமி
தரு கவிசொல் அருணாசல சாமி
தடையிலாத நடை விவேக சடைமுன்னோசை உடையதேவ (ம)

---

பூரணமேஞ் ஞானதேசிகா — என்ற மெட்டு.

சரணம்.

தோரண பந்தான பூஜிகா காரண சந்தான ஓப்சிவா
ஞானீன சப்ஹார ராஜிகா
சுடரொளிவே விடையளியே
சடைமுடியே மணிமுத்து (தோ)
பூதலமெஞ் ஞானநாயகா தீதிலாநித் பானந்தகுகா
வேதகல்யாண தாயகா
விண்ரவில்பகா பயிலின்மிசை
மறைகள்சகா யாரகிமென்குரு (தோ)
பூட்டிவினை யாடுந்தாரகா சூட்டிமுடி சூடுஞ்ச தகா
நாட்டிதமிழ் பாடும் பாதவா
நல்சிதப்பாம் சொல்பதங்கரும்
விள் அருள் அரு ஞசலந்தமிழ் (தோ)

---

ஆறுமுகவேல் — என்ற மெட்டு.

பல்லவி.

முத்துமணியே நீ எத்தனைநாளிருப்பாய் (மு)

அநுபல்லவி.

சித்தமலை யொத்துநிழல் அத்தனருள் பெற்றகனி (மு)
மூடுமந்திர மிருக்கக் கூடுமோவழிநடக்க
தேடுவோ ரிதைவிடுக்க பாடுவோம் பிர்ணவதன்னை (மு)

சரணம்.

பத்துவித முத்தொடு இளைத்த வயிரக்கல்லொளி
உத்தமர் தமக்குமிக ரொத்தவழி சிந்தெனவே
நித்தமே ஜெனித்தபர சுத்தவஸ்துக் கெப்பொழுதும்
பித்தமே பிடித்ததென்றி கத்துளோ ரிந்துலாவு (மு)
பந்தமேன வந்தவிதஞ் சொந்தமோ தகுந்தமணம்
தந்தை வனிறைவனருள் விந்தையால சுகந்தரசம்
சந்ததஞ் சிதம்பரஞ்சொல் வந்தனம் புரிந்தெடுத்த
கந்தனின் அருணாசலம் செந்தமிழ் குகந்திடுவாய் (மு)

---

தான தன தான தன தான தன தானனா
தத்ததன தத்ததன தத்ததன தானனா.

ஆதிகுரு வாய்விளங்குஞ் சித்தனுக் கரோகரா
அண்ணாமலை உண்ணாமலை தாயாருக் கரோகரா
சோதிமய மானசுப்ர மண்யருக் கரோகரா
சித்தப்பிர்ம சித்தானந்த சந்நிமேல்ர் கரோகரா
ஓதிடலைவாய் மலையின் ப்ரீதிசொல்க் கரோகரா
உத்தமர்கள் நித்யானந்த பக்திசொல் கரோகரா
பாதியுண்ட பார்வதி தபசுசொல் கரோகரா
பத்துவகை ரத்னபூ பவுசுசொல் கரோகரா
வீதிபடி பேல்மதுரங் கோதிசொல கரோகரா
வித்தில்லா விருக்ஷமொன்று வில்வத்தற் கரோகரா
வேதியர்க ளோதுஞ்சாம கீதசொல் கரோகரா
வெற்றிவேல் கரமணிந்த பற்றுதல் கரோகரா

நீதிமகா ராஜீபுரம் வாழுசொல் கரோகரா
நித்யானந்தக் கீர்த்தனைகண் பார்த்தசொல் கரோகரா
ஜாதிபறைமீது ஹரி ராமுசொல் கரோகரா
சத்துருக்கன் பரதன்தருமர் சிந்தனுக் கரோகரா
தீதிலா நந்தவனக்கண் காஷிசொல் கரோகரா
தீக்ஷன்யநற் சாக்ஷிதிரு சடைகதிக் கரோகரா
பூதிவி சிதம்பரஞ் சபாஸ்மதிக் கரோகரா
பூட்டும்அருணாஜலம்சொல் கேட்டுச்சொல் கரோகரா

---

## கும்மி விருத்தம்.

செல்வக் கணபதி வாழ
சீர்பூத்த சித்தர் வாழ
கல்விக் கதிபதி வாழ
கார்பூத்த தொண்டர் வாழ வாழி.

---

# கும்மிப் பாட்டு.

---

பக்திக் குகந்த படிமீது தெய்வ சித்து மகிழ்தமலைமீது
முத்துவிளைந்த நித்யானந்தமிழ் கீர்த்தனைக்கும்மி யடிமயிலே
ஆனைமுகமும் பெருவயிறும பதி தோணுதுசோலைச் சிங்காரமீதில்
தேனைப்பருகுங் குமரனிடஞ்சென்று தெளிந்துகும்மி யடிமயிலே
கற்றவர் கூடிப்படிபேற தவம் பெற்றவர் பாட முடியேர
கொற்றவர் சூடக்குடியேர மனங் கோரிக்கும்மி யடிமயிலே
வீணைதம்பூர்கவி மேளதாளம் பெரு சேனைபொருந்திய தாராளம்
கோணைப்பணிகுவார் வராளம் மிக கோஷ்டக்கும்மி யடிமயிலே
சித்தனருளால் புயமீதுரண்டுபக் கத்தில் கிளிகளிதுதோது

N128

அத்தனூரவைப் பகையாது நிதி அம்பாள் கும்மியடிமயிலே
ஊனுடரக்கந் தடாமல் ஒரு சானும்வயரும் படாமல்
யானுன்பதியை விடாமல் செவி யோரக்கும்மி யடிமயிலே
அஞ்சுவபதில் பலர்கூடி சித்து சொஞ்சுங் கிளியோ டுரவாடி
ரஞ்சிதக்கோலி விளையாடி அடி நாதக்கும்மி யடிமயிலே
குண்டுகள் தங்க மயர்போலே கருந்திண்டுகள் எங்கும் பயம்போலே
வண்டுகள் ராசஞ் சுயம்போலே குரு வாழக்கும்மி யடிமயிலே
விந்துருவானது வேடிக்கையோ வழி சந்துமலரிதழ்கேளிக்கையோ
வந்துவிழுந்தது வாடிக்கையோ பதில் வழுத்திக்கும்மி யடிமயிலே
எத்தனையோ தனம்வைத்திருந்தும் மனம் பக்தனுக்கிய மனம்வருமா
கர்த்தனுக்கெனக்களைந்துவிட பின்பு கருதுங்கும்மி யடிமயிலே
மல்லிகை முல்லையிருவாக்ஷி வனம் நெல்லியகத்தி புன்னைசாக்ஷி
சொல்லியதென்னை வில்வம்காக்ஷி இதை சூடிக்கும்மி யடிமயிலே
வள்ளிக்குகந்த மலைமேலே மான் துள்ளிவிளையாடும் புல்மேலே
அள்ளியளிக்குந் தமிழ்போலே விரி ஆடிக்கும்மி யடிமயிலே
அங்கங்குளிர்ந்த பதிவாழ சித்து கெங்கைதிருச்சடை நதிவாழ
சங்கம்உனது அடிவாழ கவி சாற்றிக்கும்மி யடிமயிலே
கருணாகரக் குருவாழ மகா அருளானந்த கவிவாழ
உருவேதிருப் புகழ்வாழ இதர்க் குகந்துகும்மி யடிமயிலே
வேலுக்கதிபதி சொல்வாழ வேதம் நாலுக்கன்பு பிர்மாவாழ
சூலாயுதச் சிவன்வாழ முடி சூடிக்கும்மி யடிமயிலே
செய்தாகுமிதைவேண்டுகோளின்படி சென்ராயட்டைவர்சொல்வாழ
வையாபுரியண்ணாமலையிவர் வாழக்கும்மி யடிமயிலே
சித்தன்சிதம்பரஞ் சொல்வாழ சிவ பக்தன் அருணாசலம்வாழ
மூத்தர்சப்த ரிஷிமுனிவாழ கவி முடித்துக்கும்மியடிமயிலே.

நித்யானந்தக் கீர்த்தனை முற்றிற்று.

---